## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI

## M.C.O.P. No.1730/2021 and MCOP No.1731/2021

## P.W.2

Deposition of Witness for the Petitioner / Respondent Solemnly affirmed by of this Court on **04.10.2024** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

| | |
|---|---|
| Name வனிதா | Husband Name : குபேந்திரன் |
| Village : | Taluk : |
| Caste : | Religion : |
| Calling : | Age : |

**<u>மனுதாரர் தரப்பு முதல் விசாரணை :</u>**

நான் MCOP No.1731/2021ல் 1ம் மனுதாரர் ஆவேன். வழக்கு விவரம் தெரியும். நான் எனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் சாட்சியமளிக்கிறேன். எனது தரப்பு முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் குபேந்திரனின் பிரேத பரிசோதனை அறிக்கை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **ம.சா.ஆ.10** ஆகும். எனது கணவரின் இறப்பு சான்றிதழ் அசல் **ம.சா.ஆ.11** ஆகும். எனது கணவரின் வாரிசு சான்றிதழ் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் **ம.சா.ஆ.12** ஆகும். எனது கணவரின் சம்பள சான்றிதழ் அசல் **ம.சா.ஆ.13** ஆகும். 1 முதல் 6 மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டைகளின் நகல்கள் (6 எண்ணிக்கை) **ம.சா.ஆ.14** ஆகும். 1 முதல் 6 மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தக நகல்கள் (6 எண்ணிக்கை) **ம.சா.ஆ.15** ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

எனது கணவர் தச்சராக PVK மரக்கடை மற்றும் தனியாகவும் யாராவது அழைத்தால் வேலைக்கு செல்வார். எனது கணவருக்கு தினக்கூலி

ஆகும். எனது கணவருக்கு PVK மரக்கடையிலிருந்து சம்பளம் கொடுத்ததற்கான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவரின் வங்கி கணக்கை பார்த்தால், அதில் PVK மரக்கடையிலிருந்து என் கணவர் மாதம் எவ்வளவு சம்பளம் பெற்றார் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். என் கணவரின் வங்கி கணக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே, நான் ம.சா.ஆ.13 ஆவணத்தில் கண்டுள்ளபடி என் கணவர் சம்பளம் பெறவில்லை என்றும், நான் மேற்படி ஆவணத்தை வழக்கிற்காக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மனுவில் அதிக நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு விபத்தில் தலையில் தான் காயம் ஏற்பட்டது. என் கணவர் விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தில் பயணித்த போது, தலைக்கவசம் அணிந்தாரா என்று நான் பார்க்கவில்லை. நான் மனுவில் கோரியுள்ள தொகை மிகவும் அதிகம் என்றால் சரியல்ல. நான் என் கணவர் பயணம் செய்த இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. என் கணவர் தலைக்கவசம் அணியாததால் தான் தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்பதால், 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.